**சுருக்கம்**

வேளாண்மை (ம) உழவர் நலத் துறை – விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண மாநில அளவிலான வேளாண் உயர்நிலைக் குழு ஒன்று தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் அமைத்து ஆணையிடப்பட்டது - கூடுதல் தலைமைச் செயலாளர், நீர்வள துறை மற்றும் தலைமைப் பொறியாளர், நீர்வள துறை ஆகியோரை உறுப்பினர்களாக சேர்த்து திருத்திய ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை (ம) உழவர் நலத் (வே.உ 2)துறை**

**அரசாணை (டி) எண் 13** **நாள். 27.01.2022**

திருவள்ளுவர் ஆண்டு 2053,
பிலவ வருடம், தை 14

படிக்கப்பட்டது:

1. அரசாணை (டி) எண 176, வேளாண்மை உழவர் நலத் (வே.உ 2) துறை, நாள். 29.10.2021.
2. வேளாண்மை இயக்குநரின் கடித எண். மாதி 2 / 88737 / 2021, நாள்: 7.9.2021 & 30.12.2021.

--------

**ஆணை:-**

மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட 2021-22 ஆம் ஆண்டுக்கான வேளாண்மைத்துறைக்கான தனி நிதிநிலை அறிக்கையில், விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண மாநில அளவிலான வேளாண் உயர்நிலைக் குழு ஒன்று அமைப்பது குறித்து வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் வேளாண் தொடர்பான பல்வேறு முக்கிய பணிகளை ஆய்வு செய்திடவும், சந்தை விலை, இயற்கைச் சீற்றத்தினால் பயிர்ச் சேதம், இடுபொருள் கொள்முதல் மற்றும் விநியோகம், எதிர்பார்க்கும் விளைபொருள் உற்பத்தி மற்றும் தேவையைக் கணித்தல் போன்ற விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண, தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் மாநில அளவிலான வேளாண் உயர்நிலைக் குழுவினை அமைத்து அரசால் ஆணை வெளியிடப்பட்டது. அக்குழுவில் பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலர் அவர்களும் உறுப்பினராவார்.

2. இதுகுறித்து, வேளாண்மை இயக்குநர் பொதுப் பணித் துறையிலிருந்து நீர்வள துறை பிரிக்கப்பட்டு தற்போது தனியாக செயல்பட்டு வருவதால் மாநில அளவிலான மேற்காணும் வேளாண் உயர் நிலைக் குழுவில் நீர்வளத் துறை செயலாளர் மற்றும் துறைத் தலைமை அலுவலரை குழுவின் உறுப்பினர்களாக இணைத்திட ஏதுவாக உரிய ஆணை வழங்கிடுமாறு அரசினை வேண்டியுள்ளார்.

3. அதனை ஏற்று, வேளாண் தொடர்பான பல்வேறு முக்கிய பணிகளை ஆய்வு செய்திடவும், சந்தை விலை, இயற்கைச் சீற்றத்தினால் பயிர்ச் சேதம், இடுபொருள் கொள்முதல் மற்றும் விநியோகம், எதிர்பார்க்கும் விளைபொருள் உற்பத்தி மற்றும் தேவையைக் கணித்தல் போன்ற விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண, தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட மாநில அளவிலான வேளாண் உயர்நிலைக் குழுவில் பொதுப்பணித் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களுக்குப் பதிலாக கூடுதல் தலைமைச் செயலாளர், நீர்வளத் துறை மற்றும் தலைமைப் பொறியாளர், நீர்வளத் துறை ஆகியோரை உறுப்பினர்களாக, சேர்த்து, கீழ்கண்டவாறு குழுவினை திருத்தி அமைத்து அரசு ஆணை வெளியிடுகிறது.

**உயர் நிலைக் குழுவின் அமைப்பு**

| | தலைவர்/ உறுப்பினர் |
|---|---|
| தலைமைச் செயலாளர் | தலைவர் |
| வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலர் | உறுப்பினர் செயலாளர் |
| கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித்துறை | உறுப்பினர் |
| கூடுதல் தலைமைச் செயலாளர், நீர்வளத் துறை | உறுப்பினர் |
| கூடுதல் தலைமைச் செயலாளர், கூட்டுறவு உணவு (ம) நுகர்வோர் பாதுகாப்புத்துறை | உறுப்பினர் |
| கூடுதல் தலைமைச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை | உறுப்பினர் |
| கூடுதல் தலைமைச் செயலாளர், தொழில்துறை | உறுப்பினர் |
| கூடுதல் தலைமைச் செயலாளர், சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் – வனத்துறை | உறுப்பினர் |
| கூடுதல் தலைமைச் செயலாளர், எரிசக்தி துறை | உறுப்பினர் |
| முதன்மைச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை | உறுப்பினர் |
| முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | உறுப்பினர் |
| முதன்மைச் செயலாளர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் (ம) கதர் துறை | உறுப்பினர் |
| **துறைத் தலைவர்கள்** | |
| கூடுதல் தலைமை செயலாளர் / ஆணையர் சர்க்கரைத்துறை | உறுப்பினர் |
| தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம். | உறுப்பினர் |

| | |
|---|---|
| ஆணையர், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை | உறுப்பினர் |
| இயக்குநர், வேளாண்மைத் துறை | உறுப்பினர் |
| இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை | உறுப்பினர் |
| இயக்குநர், பட்டுவளர்ச்சித்துறை | உறுப்பினர் |
| தலைமை செயல் அலுவலர், காதி மற்றும் கிராம தொழில்கள் வாரியம் | உறுப்பினர் |
| இயக்குநர், வேளாண்மை ஆய்வு (ம) விரிவாக்கம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம். | உறுப்பினர் |
| இயக்குநர், ஊரக வளர்ச்சித்துறை. | உறுப்பினர் |
| பதிவாளர், கூட்டுறவுச் சங்கங்கள், சென்னை | உறுப்பினர் |
| மேலாண்மை இயக்குநர், தமிழ் நாடு நுகர்பொருள் வாணிப கழகம் | உறுப்பினர் |
| தலைமைப் பொறியாளர், நீர்வளத் துறை | உறுப்பினர் |
| தலைமைப்பொறியாளர், வேளாண் பொறியியல் துறை | உறுப்பினர் |
| இயக்குநர், விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்றுத்துறை | உறுப்பினர் |
| நிர்வாக இயக்குநர், மகளிர் மேம்பாட்டு ஆணையம். | உறுப்பினர் |

4. மேலே அமைக்கப்பட்ட மாநில அளவிலான உயர் நிலைக் குழுவானது, முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் குறிப்பிடப்பட்ட பொருண்மை குறித்து ஆய்வு செய்யும், மேலும் இந்த மாநில அளவிலான உயர் நிலைக் குழு, அவ்வாணையில் குறிப்பிட்டபடி, மாதந்தோறும் வேளாண் திட்டப் பணிகளை ஆய்வு செய்து, வேளாண் தொடர்புடைய துறைகளை ஒருங்கிணைத்து அரசு திட்டங்களை விரைவாக செயல்படுத்தவும், நீடித்த, நிலையான வேளாண் வளர்ச்சியடையவும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்திடவும் உரிய நடவடிக்கை எடுக்கும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்